**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.160 /2024**

**Deposition of P.W.** 10

Name : டாக்டர். திரு. கோலப்பன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

**Accused Produced.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தக்கலை அரசு மருத்துவமனையில் முதன்மை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 30.11.2023ம் தேதி அதிகாலை 12.35 மணிக்கு நான் பணியில் இருக்கும் போது ராஜாமணி மகன் சுஜின் என்பவர் சிகிச்கைகாக சேர்ந்தார். அவரை விசாரித்த போது அவர் தன்னை கண்டால் தெரிந்த ஒரு நபர் 29,11,2023ம் தேதி இரவு 11.45 மணிக்கு புலிப்பனம் என்ற இடத்தில் அரசு பணியின் போது குற்றவாளியை பிடிக்க சென்ற போது கத்தியை மறைத்து வைத்து தாக்க முயன்றதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) வலது கை மணிக்கட்டில் 1 x 1 Cm அளவிலான வீக்க காயம் காணப்பட்டது.

2) இடது கை பெருவிரலில் 1 x 1 Cm அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை வழங்கி மேற்படி காயங்கள்

சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வரும் போது சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். அவர் என்னிடம் சொன்ன தகவல்களை தான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். 29.11.2023ம் தேதி இரவு 11.45 மணிக்கு எதிரியை பிடிக்க சென்றதாகவும் அப்போது புலிப்பனம் சர்ச்சில் வைத்து காயம் ஏற்பட்டதாக கூறினார் என்றால் சரிதான். உடலின் முக்கியமான பாகத்தில் காயம் ஏற்பட்டதாக கூறவில்லை. அதற்கு சிகிச்சையும் அளிக்கவில்லை. வெட்டுக்காயம் எதுவும் ஏற்படவில்லை. இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழும் போது நான் சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காயச்சான்று வழங்கிவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.